# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 29.10.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாளை ரோட்டிலுள்ள பொது மையவாடிக்கு தெய்புறம் எம்.டிஜ.ஆர். பூங்காவிற்கு கீழ்புறம் எரியூட்டு தகன மேடைக்கு செல்லும் பாதைக்கு மேல்புறம் காலியாக உள்ள இடத்தில் நிறுத்தப்படும் நான்கு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2016–2019 மூன்று ஆண்டு தொகுப்பாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திரு. 4. புஷ்பராஜன், 11/159 மேற்குத் தெரு, சவேரியார்புரம் என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டது.<br><br>மேற்படி உரிமதாரர் நான்கு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்காக ஒப்படைக்கப்பட்ட இடத்தில் மாநகராட்சியின் எவ்வித முன் அனுமதி இன்றி தன்னிச்சையாக இரண்டு கடைகள் அமைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கடைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் மேற்படி உரிமதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட குத்தகை இனமானது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ரத்து செய்யப்படுவதுடன் மாநகராட்சி நிர்வாகத்தால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதுடன் இதற்கான செலவு தொகையினை உரிமதாரரிடமிருந்து வசூல் செய்ய சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உரிய அறிவிப்பு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். அ16/4741/2015 நாள் 14.03.2016 வாயிலாக அறிவிப்பு செய்யப்பட்டது.<br><br>எனினும் மேற்படி உரிமதாரர் தன்னால் ஆக்கிரமிப்பு வாயிலாக ஏற்படுத்தப்பட்ட கடையினை தொடர்ந்து அப்புறப்படுத்தாமல் இருந்து வருவதன் மூலம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை மீறி செயல்பட்டு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே 2016–2019 வருடத்திற்கான பொது ஏல நிபந்தனைகள் வரிசை எண். 34 ஐ மீறி | 183) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செயல்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளதால் இவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட மேற்படி குத்தகை இனத்தினை ரத்து செய்து உடனடியாக மேற்படி இனத்தின் பொறுப்பினை மாநகராட்சி தன் வசம் பொறுப்பு எடுத்துக்கொள்ளவும் இதற்கான அறிவிப்பினை உரிமதாரரக்கு அனுப்பிடவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>அ16/4741/2015 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 29.10.2018